**21. அதிகமான் கதை**

அதிகமான் என்பவன் தகடூரில் (தருமபுரி) இருந்து அரசாட்சி செய்துகொண்டிருந்தான். இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்.ஒரு நாள் கஞ்சமலை மீது காட்டிலே சுற்றிக்கொண்டிருந்தான். அப்பொழுது அங்குத் துறவி யொருவரைக் கண்டான். அவரைப் போற்றி வணங்கிச், சாக்காட்டில் இருந்து நீக்கத்தக்க மருந்திருந்தால் தந்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அவர் ஒரு நெல்லிக்கனியை அரசனிடங் கொடுத்து, "இக்கனியை உட்கொண்டவர்களுக்கு நரை திரை வரமாட்டா, நீண்ட நாள் உலகில் வாழ்ந்திருக்கலாம்" என்று கூறினார். கனியைப் பெற்றுக்கொண்ட அதிகமான் தன்னுடையநகரத்தை யடைந்தான். சில நாட்கள் சென்றன. ஒரு நாள் ஔவையார் அதிகமானுடைய அவைக்கு வந்தார். அக்கனியை அதிகமான் ஔவையாரிடங் கொடுத்து உண்ணச் செய்தான். அவர் உண்ட பிறகு அக்கனியைப் பற்றிய செய்தியை ஔவையாருக்குக்கூறினான். அக் கனியை உண்ட ஔவையார் நீண்ட காலம் உலகில் வாழ்ந்திருந்தார். "பூதலத்தினில் அதிகமான்மணிமுடி பொறுத்தர சியற்றுங்கால் காதலாய்க்கருங் காட்டிடைச் சித்தரைக் கண்டுவந்தனை செய்துவீதலின்மருந் தொன்றருளென்னலும் விண்புகு கருநெல்லித் தீதிலாக்கனி ஒன்றினை உதவவே சேரலன்மகிழ்வெய்தி " கருநெல்லிக்கனி) (கரபுரநாதர் புராணம்)

